ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2203/39 - 2020 නොවැම්බර් මස 28 වැනි සෙනසුරාදා - 2020.11.28

*2203/39 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டம்***

*25 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1984 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1984 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மற்றும் 1992 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டங்களாலும் திருத்தியமைக்கப்பட்டவாறான 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் 25 (1) ஆம் பிரிவின் கீழ் துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.*

**கட்டளை**

2020 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 2195/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் இவ்விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள 01 தொடக்கம் 03 வரையுள்ள அட்டவணைகள், கீழ் குறிப்பிடப்படும் புதிய 01 தொடக்கம் 03 வரையான அட்டவணைகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுவதுடன் அவ்வட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் நியதிச் சபையான இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சுய வியாபார நடவடிக்கைகளுக்காக காணி சுவீகரித்தல் சட்டத்தின் பிரகாரம், சுவீகரிப்புச் செய்து அச்சட்டத்தின் கீழ் இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கு கையளித்தல், இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் 25 (1) ஆம் பிரிவின் கீழ் இக்கட்டளையின் மூலமாக அனுமதி வழங்குகின்றேன்.

**பீ. ரோஹித அபேகுணவர்தன,**
*துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சர்.*

கொழும்பு,
*2020, நவெம்பர் 24.*

## அட்டவணை 01

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் காங்கேசன்துறை மேற்கு, இல. J/ 233 கிராம அலுவலர் பிரிவில் காங்கேசன்துறை மேற்குக் கிராமத்தில் அமைந்துள்ள 6.536 ஹெக்டயார் அல்லது பதினாறு ஏக்கர் இருபத்துநான்கு பேர்ச்சஸ் (16ஏ. 0றூ. 24பே.) பரப்பளவுடன் கூடிய எஸ். ஆர். இளேபெருமாரச்சி உத்தரவுபெற்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட 2020.08.11 ஆந் திகதிய S/Mis/510A ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு 01 ஆம் இலக்கமுடைய காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ள வடக்குத் திசையில் கடல் நெடுகில் ஒதுக்கப்பட்ட பூமியும் கிழக்குத் திசையில் 02 ஆம் காணித்துண்டும் கோவிலும், தெற்குத் திசையில் கோவில் மற்றும் வீதி (தெ. அ. அ.) மேற்குத் திசையில் கப்பல் மேடைக்கான வீதியும்.

## அட்டவணை 02

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் காங்கேசன்துறை மேற்கு, இல. J/ 233 கிராம அலுவலர் பிரிவில் மற்றும் இல. J/ 234 மத்திய காங்கேசன்துறை கிராம அலுவலர் பிரிவில் காங்கேசன்துறை மேற்கு மற்றும் காங்கேசன்துறை கிராமங்களில் அமைந்துள்ள 13.333 ஹெக்டயார் அல்லது முப்பத்திரெண்டு ஏக்கர் மூன்று றூட் முப்பத்தொரு பேர்ச்சஸ் (32ஏ. 3றூ. 31பே.) பரப்பளவுடன் கூடிய எஸ். ஆர். இளேபெருமாரச்சி உத்தரவுபெற்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட 2020.08.11 ஆந் திகதிய S/Mis/510A ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு 02 ஆம் இலக்கமுடைய காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ள வடக்குத் திசையில் கடல் நெடுகில் ஒதுக்கப்பட்ட பூமியும், 03 ஆம் இலக்கக் காணித்துண்டும், கிழக்குத் திசையில் கடல் நெடுகில் ஒதுக்கப்பட்ட பூமியும், இலங்கைச் சுங்கத்திற்குச் சொந்தமான காணியும், தெற்குத் திசையில் வீதி (தெ. அ. அ.) மேற்குத் திசையில் கோவில் மற்றும் 01 ஆம் இலக்கக் காணித்துண்டு.

## அட்டவணை 03

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் மத்திய காங்கேசன்துறை மத்தி, இல. J/ 234 கிராம அலுவலர் பிரிவில் காங்கேசன்துறை கிராமத்தில் அமைந்துள்ள 0.371 ஹெக்டயார் அல்லது பூச்சியம் ஏக்கர் மூன்று றூட் இருபத்தாறு பேர்ச்சஸ் (0ஏ. 3றூ. 26பே.) பரப்பளவுடன் கூடிய எஸ். ஆர். இளேபெருமாரச்சி உத்தரவுபெற்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட 2020.08.11 ஆந் திகதிய S/Mis/510A ஆம் இலக்க வரைபடத்தில் விவரிக்கப்பட்டுள்ளவாறு 03 ஆம் இலக்கமுடைய காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ள வடக்குத் திசையில் கடல் நெடுகில் ஒதுக்கப்பட்ட பூமி, கிழக்குத் திசையில் 02 ஆம் இலக்கக் காணித்துண்டும், இலங்கைச் சுங்கத்திற்குச் சொந்தமான காணியும், தெற்குத் திசையில் 02 ஆம் இலக்கக் காணித்துண்டு, மேற்குத் திசையில் கடல் நெடுகில் ஒதுக்கப்பட்ட பூமி.

12-190

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.